

காரைநகர், தங்கோடை பற்றாசிங்கம் பரம்பரையில்
வந்துதித்த சைவவேளாளர் உயர்குல

# உயர்திரு கணபதிப்பிள்ளை கந்தப்பு அவர்களினது

இறைபேறு குறித்து
62வது ஆண்டு நினைவு மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

வரலாற்றுப் பெருமையும் தொன்மையும் மிக்க காரைநகர் என்ற அழகிய கிராமத்தில் சைவப்பாரம்பரியத்திலும் தமிழ்ப் பண்பாட்டிலும் உயர்ந்து விளங்கிய புகழ்பூத்த பற்றா சிங்கம் பரம்பரையில் வந்துதித்தவரும் எம்மையெல்லாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ வைக்க அல்லும் பகலும் அர்ப்பணிபோடு அயராது உழைத்து அன்பு மழை பொழிந்து கல்வி தந்து தக்கதுணை தேடித்தந்து தரணியில் வளமோடும் புகழோடும் மதிப்போடும் உயர்ந்து விளங்க வழிகாட்டிய எமது அன்புத் தெய்வம் உயர்திரு கணபதிப்பிள்ளை கந்தப்பு அவர்கள் இறைவனின் பாதார விந்தங்களை சென்றடைந்து 62 ஆண்டுகள் நிறைவுற்ற இத்தருணத்தில் அன்னாரின் நினைவுகளை தாங்கி வரும் இச்சிறிய மலரினை அன்னாரினது பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமரர் கணபதிப்பிள்ளை கந்தப்பு

நேரிசை வெண்பா

சீரோங்கு சுபகிருது கார்த்திகைத் திங்கள்
காரோங்கு திருதியைத் திதியில் – பேரோங்கு
காரைநகர் தங்கோடை பதியுதித்த கந்தப்பு
பாரை விட்டுப் பரமனடி சேர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் கந்தப்பு வள்ளியம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அமரர் கந்தப்பு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்**

அமரர் கணபதிப்பிள்ளை கந்தப்பு சுப்பிரமணியம்

மலர்வு: 06-10-1929 மறைவு: 01-12-2010

திதி: கார்த்திகை அபரபக்க தசமி

திதி வெண்பா

செந்தமிழ் சிவநெறி வளர்த்த செம்மல்
சுந்தரேசர் அம்பிகை தினம்துதிசெய் அண்ணல்
நந்தமிழ் விகிர்த்தி அபரபக்க தசமியில்
பந்தங்கள் நீக்கி பரமனடி சேர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் துதி

திரு விளங்கு மால்மருகா சேவல்தனில் ஏறி
வரும் அரன்றாள் ஈன்றருளு மைந்தா – முருகனுக்கு
முன் பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றும் காப்பு!

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே!

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் – செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – ஊருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தனிவிப்பான்–விநாயகனே
விண்ணிற்க்கும் மண்ணிற்க்கும் நாதனுமாய தன்மையினால்
கண்ணிற் பணிமின் கலந்து

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைச் சாய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
# தேவாரங்கள்
## திருமுறைகள் 1– 3

1. துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்சவுதைத்தன அஞ்செழுத்துமாமே

2. தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையினுந்துணை அஞ்செழுத்துமே

3. மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமே யவனே

4. அவ்வினைக் கிவ்வினை யாமென்றுசொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்

5. இடரினுந் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனதளல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோ எமையளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே

6. தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமல ரான் முனைநாட் பணிந் தேத்த வருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு சுவாமிகள்
# அருளிய தேவாரங்கள்
## திருமுறைகள்– 4,5,6

1. கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதிகைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

2. சலம்பூ வொடுதூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடடி யேனதி கைக்கெடில
விரட்டா னத்துறையம்மானே

3 முத்தினை மணியைப் பொன்னை
முழுமுதற் பவளம் ஏய்க்கும்
கொத்தினை வயிர மலைக்
கொழுந்தினை யமரர் சூடும்
வித்தினை வேத வேள்விக் கேள்வியை
விளங்க நின்ற
அத்தனை நினைந்த நெஞ்ச மழகிதாம்
நினைந்த வாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார்
# தேவாரங்கள்
## திருமுறை–7

1. அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே

2. மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே

3, மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்

## எட்டாம் திருமுறை

1 பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெரும் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என் றருள்புரி யாயே

2 தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்த மொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலன் ஓர்கைம் மாறே.

3. வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மார்க்கு அரியோய் நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9ம் திருமுறை – திருவிசைப்பா

1 ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

2 கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகா லா காம நாசா
ஆலமே அமுதுண் டம்பலச் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே

3 பவளமால் வரையைப் பனிபடர்ந்
தனையதோர் படரொளிதரு திருநீறும்
குவளைமாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவளமாளிகை சூழ்தரு தில்லை
யுள்திரு நடம்புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல்மெழு(கு) ஒக்கின்றதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9ந் திருமுறை – திருப்பல்லாண்டு

1. மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்கநெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

2. மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடி
யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்(கு)
ஆட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்தபொருள் அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

3. சொல்லாண் டசுரு திப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூல நாயனார் அருளிய திருமந்திரம்

## திருமுறை–10

1. அன்புஞ் சிவமுமிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் யமர்ந்திருந் தாரே

2, அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தாரே

3, சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பாரிங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே,

4, அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே

5, தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

6. மந்திர மாவதும் மாமருந் தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே.

7. யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11ந் திருமுறை

## காரைக்கால் அம்மையார் அருளியவை

1. செத்த பிணத்தைத் தெளியாதொரு பேய்சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக்கனல் விட்டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப்பதைக்க மோதிப்பலபேய் இரிந்தோடப்
பித்த வேடங்கொண்டு நட்டம்பெருமான் ஆடுமே.

## பட்டினத்தார் பாடல்கள்

2. கல்லாப் பிழையுங்கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நிலையாப்பிழையும் நின்னைஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

3. ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி யறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்யான்
செய்யுந்திரு வொற்றியூருடை யீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே

4 காலன்வருமுன்னே கண்பஞ்சடையு முன்னே
பாலுண்கடைவாய் படுமுன்னே– மேல்விழுந்து
உற்றாரழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத்தானையே கூறு

5. நோயிற்றிடராமல் நொந்துமனம் வாடாமற்
பாயிற்கிடவாமல் பாவியேன் காயத்தை– ஒருநொடிக்குள்
நீக்கியெனை ஒண்பேரூரா ஐயா உன்றன்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து

6. ஊருஞ்சதமல்ல உற்றார்சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர்சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்தில்
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங் கச்சியேகம்பனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12ந் திருமுறை

## சேக்கிளார் நாயனார் அருளிச்செய்த பெரியபுராணம்

1. வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற் புகலித்திரு ஞானசம்பந்தர்
பாதமலர்தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

2 கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச்சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்குழல் போற்றிபோற்றி

3. தண்ணளி வெண்குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூமழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்

4. ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக்குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவீகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர்இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

5. தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உன்றன் திருநடம்கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்தபிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில் ஆனந்தஅருவி நீர்சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடிஅறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

1 ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

2 கைத்தல நிறைகனி அப்ப மொடவல் பொரி
கப் பியகரிமுகன் – அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்!
கற்பகம் எனவினை – கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொருதிரள் புய – மதயானை
மத்தள வயிறனை உத்தமிபுதல் வனை
மட்டவிழ் மலர்கொடு – பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய – முதல்வோனே
முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம்
அச்சது பொடிசெய்த – அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை – இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் – பெருமாளே!

3 உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேன முதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட் பாடல்கள்

பாட்டும், பொருளும்

தோடுடைய செவியன் விடை ஏறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்(து)
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவனன்றே!

பொருள்:

தோடு என்ற காதணியை அணிந்த உமாதேவியாரைத் தம் இடப்பாகத்திற் கொண்டவரும், நந்தியாகிய காளையை ஊர்தியாக உடையவரும், ஒப்பற்ற அழகும், தூய்மையும் உடைய வெண்பிறையைத் தமது சடையில் அணிந்தவரும், சுடுகாட்டுச் சாம்பலை தம் திருமேனியிற் பூசியவருமாகிய சிவபிரான் என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டார். அவரை, இதழ்களை உடைய தாமரைப் பூவின்மேல் உறையும் பிரம்மதேவன் முன்காலத்தில் வணங்கித் துதிக்கவே, அவருக்கு அருள்செய்த தலம் என்னும் பெருமையை உடையது சீர்காழிப் பதி. அப்பதியின்கண் உறைகின்ற சிவபிரானாகிய இப்பெருமானே (எனக்குப் பால் கொடுத்து உதவியவர்)
(இஃது திருஞான சம்பந்தப்பெருமான் உமாதேவியிடமிருந்து ஞானப்பாலுண்ட பின் பாடிய முதற்பாடல்)

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே.

பொருள்:

முற்றிய பேரன்பால் உள்ளுருகிக் கண்ணீர் பெருக்கெடுத்தோட ஓதுகின்றவர்களுக்கு முக்திநலம் கொடுப்பதும், நான்கு வேதங்களின் சாரமாய் அமைவதும், பரமேசுவரனாகிய சிவபிரானது மந்திரமாயிருப்பதுவும் நமசிவாய என்ற திருவைந்தெழுத்தாகும்.
(இது திருஞானசம்பந்தர் தனது மண்ணுலக வாழ்வின் இறுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநல்லூர் பெருமணத் தலத்தில் வைத்து அருளிச் செய்த நமசிவாயப் பதிகத்தின் முதற்பாடல் ஆகும்)

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

பொருள்:
கெடில நதிக் கரையிலுள்ள திருவதிகை என்னும் தலத்திலுள்ள வீரட்டானம் என்னும் ஆலயத்துள் உறைகின்ற அம்மையப்பனே! நந்தி வாகனனே! உனது திருவடிகளை அடியேன் அல்லும், பகலும், அனவரதமும் மறப்பின்றி வாழ்த்துகின்றேன். நான் அறியாமையால் செய்த பிழைகளைப் பொறுத்து, யமவேதனை போன்ற எனது வயிற்று வலியை விலக்கி அருள்வாயாக. அது எனது குடலைக் குடைகின்றது. அவ்வலியை என்னால் தாங்கமுடியவில்லை.
(இப்பாடல் அப்பர் சுவாமிகள் சூலைநோயால் வருந்தியபோது பாடியது. இதுவே அவருடைய முதற் பாடல். இது நான்காம் திருமுறையின் முதற்பதிகத்தின் முதற்பாடல்)

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருள்துறையுள்
அத்தா உனக்(கு) ஆளாயினி அல்லேன் எனலாமே.

பொருள்:
அடியாரிடத்தில் தாய்போன்று பேரன்பைச் சொரிகின்றவனே (பித்தா), பிறையை அணிந்தவனே, பெருமை பொருந்தியவனே, உன்னை அடியேன் ஒருபோதும் மறவாது எண்ணி வருகின்றேன். நீயும் கருணைகூர்ந்து என்னுள்ளே கோயில் கொண்டாய். பெண்ணை ஆற்றின் தென்கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள்துறை என்ற கோயிலுள் உறையும் என் அப்பனாகிய சிவபிரானே, உனக்கு நான் அடிமையாகிவிட்டேன். இனி நீ என்னைக் கைவிட்டுவிடாதே.
(இப்பாடல் சுந்தரமூர்த்திநாயனார் பாடிய முதற்பாடல். இறைவன் "பித்தா" அடியெடுத்துக் கொடுக்கப் பாடியது)

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்(து) அயனுமால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர் குருந்த மேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

பொருள்:
எங்கும் நிறைந்த பேரொளி வடிவினனே, சுருண்ட கூந்தலும் குவிந்த தனங்களுமுடைய உமாதேவியைத் தனது இடப்பாகத்தில் உடையவனே, மேலானவனே, பால் போன்று வெண்ணீறு பூசியவனே, தாமரை மேலுறையும் பிரம்மதேவனும், விஸ்ணுவும் அறிந்துகொள்ள முடியாத பெருமை உடையவனே, சீரும் சிறப்பும் மிக்க திருப்பெருந்துறை கோயிலினுள்ளே மலர்கள் நிறைந்த குருந்தமரத்தடியில் எனக்குக் காட்சியருளிய ஆதிகுருமூர்த்தியே, நான் அன்புடன் அழைத்தால் "என்ன வேண்டும்?" என்று கேட்டு அருள்புரிய வேண்டும்.
(இது மணிவாசகர் அருளிய திருவாசகம் அருட்பத்து முதற்பாடலாகும். குருந்த மரத்தடியில் அவர் சிவபெருமானைத் தரிசித்துப் பாடியது)

வாளால் மகவரிந்(து) ஊட்டவல்லேனல்லேன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேனல்லேன் பக்திசெய்து
நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேனல்லேன் நானினிச்
சென்(று)
ஆளாவது எப்படியோ காளத்தி அப்பருக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

திரு சிறுத்தொண்ட நாயனாரைப் போன்று ஆண்டவன் அடியவர்க்குத் தன் மகனை வெட்டி, கறி சமைத்து உண்பிக்கின்ற பக்தி என்னிடம் இல்லை. தன் மனைவி, "எம்மைத் தொடாதீர் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டுச் சொன்ன சொல்லின்படி, தனது இளமைப் பருவம் முதற்கொண்டே மனைவியையும், மற்ற பெண்களையும் தன் மனத்தாலும் தொடாது விரதம் பூண்டு வாழ்ந்த திருநீலகண்ட நாயனாரது மனவுறுதியும் எனக்கில்லை. ஆறு நாட்கள் உண்ணாமல், உறங்காமல் திருக்காளத்தி குடுமித்தேவரை வழிபட்டு, தன் கண்ணைப் பிடுங்கி அப்பிய கண்ணப்ப நாயனாரது பக்தியும் என்பாலில்லை. அப்படியிருக்க நான் திருக்காளத்தியில் உறையும் இறையவர்க்குத் தொண்டனாவது எங்ஙனம் முடியும்?

(திருப்பாடல் திரட்டு –பட்டினத்தடிகள் பாடியது)

கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழலிகனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலூறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே!

பொருள்:

பிறவித் துயரின் வெப்பத்தைப் போக்கும் அருள் நிழலைத்தரும் மரம் போன்றவனே, பேரின்பம் தருபவனே, நீரோடையில் ஊறுகின்ற இனிய தண்ணீர் போன்றவனே, தண்ணீரில் பூத்த நறுமலர் போன்றவனே, மேடான இடத்தில் வீசுகின்ற மென்மையான தென்றலைப் போன்றவனே, தென்றல் தரும் சுகவடிவே, விளையாடுகின்ற சிறு பருவம் முதலே என்னை அடிமையாய் ஆட்கொண்ட என் தலைவனாகிய இறைவா, சிற்சபையில் ஆடுகின்ற அரசனே, என் புகழ்மாலையை நீ ஏற்றருள்வாயாக!

(வள்ளலார் பாடிய திருவருட்பா அருள்விளக்க மாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை நிறைந்(து) அகம்புறமும் துளிம்பி வழிந்(து)
உயிர்க்கெல்லாம் களைகணாகித்
தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் சிதையா ஞானப்
பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய் பொய்யனேன்றன்
ளமருள் நிறைந்த மனக்கருங்கற் பாறையு முட்
கசிந்துருக்கும் வடிவத்தோயே!

பொருள்:

எனது உள்ளும் புறமும் நிறைந்து அதற்கு மேலுமாகி நிற்கின்ற அருள்வடிவே, எல்லா உயிர்களுக்கும் ஆதாரமானவனே, தெளிவும் இன்பமும் தரும் அருட்பார்வை உடையவனே, இந்தப் பொய்யனது மயக்கமுற்ற மனமாகிய கருங்கல்லையும் உருக்கும் வகையான பேரழகுடையவனே, (உனை வணங்குகின்றேன்)

(வள்ளலார் – மகாதேவ மாலை)

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கரவின் மணியாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்!

பொருள்:

ஒளியுடைய பத்து கரங்களும், ஐந்து முகங்களும் கொண்ட சிவபிரானது தேருக்குச் சக்கரமாக அமைந்த சூரியனானவன், ஸ்ரீ மகா கணபதியின் திருவயிற்றுக் கச்சையாக இருக்கும் பாம்பின் தலைமேல் ஒளிரும் மணியாக இருக்கின்றான். அத்தகு மேன்மை மிக்க விகட சக்கர கணபதியின் நிலையான திருவடிகளைப் பணிகுவாம்.

(கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் இயற்றிய கந்தபுராணத்தின் முதற்பாடல்)

காக்கக் கடவிய நீ காவா(து) இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்கா யினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:
ஆறுமுகப் பெருமானே, என்னைக் காப்பதற்குக் கடமைப்பட்டுள்ள நீ என்னைக் காக்கவில்லையென்றால் யாருக்குப் பாரம்? கடம்ப மலர்களாலாகிய மாலை அணிந்தவனே, சுடர் வேலா! முருகா! இது நல்ல தருணம். ஏனக்கருள்புரிக!
(நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை வெண்பா)

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத் தானே!

பொருள்:
இறைவன் திருக்கோயில்களில் பூசைகள் சரிவர நடைபெறாவிடில் மன்னனுக்கு (ஆட்சி செய்வோருக்கு) தீங்கு உண்டாகும்: மழை குறையும்: கொள்ளையும் திருட்டும் உலகத்தில் அதிகப்படும். ஏன்னுடைய குருவாகிய சிவபெருமான் எனக்கு உரைத்தது இஃது.
(திருமூலரின் திருமந்திரம்)

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழு(து) எழென் மனனே.

பொருள்:
என் மனமே, தனக்கு மேலொருவரின்றி இணையற்ற பெருமை உடையவனும், எனக்கு மயக்கமற்ற ஞான நிலையை அருளியவனும், சோர்வற்ற தேவர்களுக்குத் தலைவனுமாகிய ஸ்ரீ மகா விஸ்ணுவினது, துன்பம் போக்கி இன்ப ஒளியைத் தரும் திருவடிகளை வணங்கி வாழ்த்துவாயாக!
(ஸ்ரீ நம்மாழ்வாரின் முதற்பாட்டு — திருவாய்மொழி)

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

எனது தோழியே! மத்தள ஓசையும், சங்கோசையும் எழுந்துகொண்டிருப்பதும், முத்துமாலைத் தோரணங்களால் அணி செய்யப்பெற்றதும் ஆகிய திருமணப் பந்தலின் கீழ், எனதுயிர்க் காதலனாகிய ஸ்ரீமன் நாராயணன் எழுந்தருளி வந்து என்னைக் கைப்பிடிப்பதாக (மணந்துகொள்வதாக) ஒரு தெய்வீகக் கனவு கண்டேன்.
(ஸ்ரீஆண்டாள் – நாச்சியார் திருமொழி)

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக,– செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.

பொருள்:

உலகமே விளக்காக, நீள்கடலே எண்ணெயாக, சுடர்விடும் சூரியனே தீபமாக ஒரு ஞான விளக்கை ஏற்றி வைத்து, ஒளிமிகும் சக்ராயுதத்தை உடைய மகாவிஸ்ணுவுக்கு எனது பெருந்துன்பக் கடல் வற்றிப் போகுமாறு துதி மாலையைச் சூட்டுகின்றேன்.
(ஸ்ரீபொய்கையாழ்வார் – முதல் திருவந்தாதி)

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா,– நன்புரிகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

பொருள்:

அன்பே விளக்காகவும், பக்தியே எண்ணெயாகவும், உருகுகின்ற எனது மனமே திரியாகவும் உள்ள ஒரு ஞான விளக்கை ஸ்ரீமன் நாராயணனுக்கு நான் ஏற்றி வைக்கின்றேன்.
(ஸ்ரீ பூதத்தாழ்வார் – இரண்டாம் திருவந்தாதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறி அளிக்கும்வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் தங்கோடை சைவவேளாளர் உயர்குல

## உயர்திரு அமரர் கணபதிப்பிள்ளை கந்தப்பு அவர்களின் வாழ்க்கை வரலாறு.

ஆசிரியப்பா

பங்கயக் குளமும் பாங்கமை வாழையும்
தேங்கொடு பனையும் தேமாம் பொழிலும்
பாங்கெலாம் நிறைந்து பகர்தரு வீதிவாய்
பல்வகைப் பொலிவுடைப் பண்பொடு மேம்படு
கல்வி நிலையக் கலைபயில் ஒலியும்
நல்லருள் சுரக்கும் ஆலய மணியும்
நாலா பக்கமும் ஓங்கி ஒலித்திடும்
வந்தனை செய்பவர் வாழ்த்தொலி முழங்கிடும்
கற்றவர் விளங்கிடும் காரைமா நகர்தனில்
தங்கும் புகழுடை தங்கோடைப் பதியில்
இங்கிதமாய் வாழ்ந்த பற்றா சிங்கம்
பரம்பரை வந்த பண்புடை நம்பி
காசி அம்பலவி கணபதிப் பிள்ளை
கந்தப்பு செந்தமிழும் சிவநெறியும் செழிக்க
வந்தோன் நாள்தோறும் சிவபூசை செய்து
சாத்திரங்கள் தோத்திரங்கள் தொடர்ந்து ஓதி
அனுபூதி பெற்ற அறநெறி வள்ளல்
செல்வச் சீமான் சேது சிதம்பரம்
சிவதலங்கள் தொடர்ந்த சென்று தரிசனம்
பெற்ற சிவனடியார் நாள்தொறும் அதிகாலை
திருவண் ணாமலை திருவண் ணாமலை
யெனத் கழலது கண்ட மெழுகதுபோல
நெக்குருகி முத்திக்கு நெறிசெய்த முத்தன்
பன்னிரு தடந்தோள் கந்தன் நெறியில்
கந்தப்பு வளமுடை நங்கையர் தெய்வானை
வள்ளிய ம்மையை வதுவை செய்தே
இல்லறம் சிறக்க நல்லறம் செய்து
நானிலம் போற்ற காரிருள் நீங்க
நம்பி உருவோங்க எழிலோங்க உயர்புகழும்
ஓங்க பெரும்பொருளும் சேரக் கருவோங்கி
உலகளவும் நிலைத்து வாழ வளமுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களாம் மதுரைஉறை பெயருடை மீனாட்சி
செல்வம் தருகின்ற சீதேவி பெயருடையாள்
குபேரனாய் குலம்காக்க வந்து உதித்த
இராச நாயகம் கலைமகள் பெயருடை சரஸ்வதி
செல்லமாய் பிறந்த செல்லம்மா யோகமாய்
வந்த யோகம்மா வள்ளி தெய்வானை
மணாளன் பெயருடை குடும்பம் சுடர்விட
வந்த சுப்பிற மணியம் மாரியாய்
வந்த மாரிமுத்து மாமணி மாணிக்கம்
ஆடல் வல்லான் அம்பல வாணர்
பாருலகு இயக்கும் பரமேஸ்வரி குடும்பம்
பூரணமாக வந்த பூரணம் அனைத்து
குழந்தைச் செல்வங்களை அன்புடன் பேணி
உள்ளம் பூரிக்க உவகை பொங்கிடப்
பாசமாய் வளர்த்து பள்ளிக்கு அனுப்பி
கல்வி கற்று கற்றோ ராக்கி
உரிய பருவம் எய்திட மூத்தோளாம்
மீனாட்சியை மலேசியா தொழில் செய்யும்
முருகேசு நம்பிக்கும் சீதேவிப் பிள்ளையை
மலேசியா பணி செய்த நடரா சாவிற்கும்
சரஸ்வதியை பதுளை வர்த்தகர் சதாசிவத்திற்கும்
செல்லம்மாவை டிக்கோயா வணிகர் நம்பி
கணபதிப் பிள்ளைக்கும் யோகம்மாவை ஆசிரியர்
வைத்திய லிங்கத் திற்கும் திருமணம்
செய்து மங்கலமாய் வாழவழி காட்டி
முதல்வனாய் தோன்றி மலேசியாவில் சுகாதார
அத்தியட்சராய் பணிசெய்தோன் தங்கைகள் வாழ்விற்கு
தன்வாழ்வை அர்ப்பணித்த தியாக சீலன்
குடும்பம் செழித்திடச் செயற்பட்ட செயல் வீரன்
காரை.இந்துக் கல்லூரி கட்டிடம் வளர
அண்ணா பரஞ்சோதியுடன் இணைந்து செல்வம்
சேர்த்துக் கொடுத்த சேவையாளன் அண்ணல்
இராச நாயகத்தை அன்பான கண்டிப்புடன்
தாயகம் அழைத்து வள்ளிய ம்மையைத்
திருமணம் செய்து திருப்தி பெற்று
மாரிமுத்து மகளை ஆங்கம வர்த்தகர்
குமார சுவாமிக்கும் மாணிக்கத்தை கம்பகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகர் தியாக ராசாவிற்கும் திருமணம்
விருப்புடன் செய்து தந்தை தாய்உடன்
பிறந்தோ ருக்கும் சமுதா யத்திற்கும்
சலியாது உழைத்த உத்தம சீலன்
கே.கே. சுப்பிற மணியத்திற்கு நங்கை சரஸ்வதியை
கல்யாணம் செய்து களிப்பு அடைந்து
அன்பு மகள் பரமேஸ் வரியை
குஞ்சுப் பரந்தன் கமத்தொழில் வித்தகர்
பரம சிவத்திற்கு திருமணம் செய்தீர்
வேரும் விழுதுமாக பரந்த ஆலமரமாக
விரிந்த தங்கள் பெரிய குடும்பமாம்
மக்கள் மருமக்கள் பேரப் பிள்ளைகள்
தங்கள் வீட்டில் ஒன்றாய் கூடி
உண்டு மகிழ்ந்து உறங்கி வாழ
தங்கள் வாழ்நாள் வரையும் வளம்செய்தீர்
எண்ணற்ற எருதுகள் பசுக்கள் பண்ணை
வைத்துப் பக்குவமாக மாட்டுமால் தொழுக்கள்
அமைத்து மழையால் நனையாது வெயிலால்
உலராது பக்குவமாகப் பாதுகாத்து வேளை
தவறாது இரைகள் போட்டு அவற்றினை
பிள்ளை களாகப் பேணி வளர்த்து
மாரி வந்தால் வேப்பம் புகையிட்டு
தவிடு வறுத்து ஒத்தணம் கொடுத்து
நோய் நொடியின்றி வாழ மருந்து செய்தீர்
பணியாளர் பலரிருந்தும் இறுதி வாழ்நாள்
வரையும் வண்டில் மாடு சவாரி
செய்து வயல்கள் தோட்ட வேலைகள்
செய்து சுறுசுறுப்பாய் வாழ்ந்து காலைமாலை
வயல்கள் சுற்றி நிலமகள் மகிழ்ந்து
விளைச்சலை பெருக்கிடக் கோக்காலியில்
நெல்லும் மூட்டை மூட்டையாக எள்ளு
பயறு குரக்கன் உழுந்தும் அடுக்கி
உதவி செய்தோர் அயலார் உறவினர்
அனைவர்க்கும் உவந்து வழங்கி உவகை
அடையும் வளமாக வாழ்ந்த வள்ளல்
பூரண வாழ்வு வாழ்ந்த புண்ணியன்
ஆயிரம் பிறைகண்ட அன்புடை அண்ணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நாட்கள் நெடிது வாழந்தோன்
தொண்ணீ ிரண்டாம் அகவையில் தொல்லுலகு
நீத்து நெஞ்சம் நிறைந்த நிமலன்
அண்ணா மலையான் அடிக்கமலம் சேர்ந்தாரே
“மணியன் செய்வான்” தந்தையின் மகத்தான
கூற்றை தலைமேற் கொண்டு தங்கை
பூரணத்தனை விசேட ஆணையாளர் பணிசெய்த
ஏனாதி நாதனுக்கு திருமணம் செய்தும்
துறைமுகக் கூட்டுத்தாபன நிறைவேற்றுப் பணிப்பாளர்
அம்பல வாணருக்கு அழகிய நங்கை
தாட்சா யினியை திருமணம் செய்தனரே
கருணை வள்ளல் கந்தப்பு ஆன்மா
திருவருள் பெருக்கால் பிள்ளைகள் அனைவரும்
பெற்றும் பெருகி பதினாறு பேறும்
பெற்று பெருவாழ்வு வாழ்கின்றனரே.

எந்நாளும் யாம் வணங்கும் எழிற்தெய்வ மதுவானாய்
என்றாலும் எந்தையே இழந்தெவ்வாறு உய்ந்திடுவோம்
அழலனைய துயர் நலியா வண்ணம் அனைவரையும்

நிழல் தந்து ஒளியாய் நின்றவுன் நீள் பிரிவால்
தழலது சேர்மெழுகே போல்தாங்க வொணாத் துயரமதால்
உழலுகின்றார் உறவினர்கள் உருகுகின்றார் உள்ளமெல்லாம்.

பாசத்தால் பிணைத்திட்டுப் பற்றுடனே வளர்த்திட்ட
நேசமுள்ள எழில்மிக்க நேயம்மிகு திருமுகத்தை
மாசில்புகழ் மதிகாட்ட மருவருள்தான் கதிர்காட்ட
பாசிலைசேர் செடிகொடியாய்ப் பல்கவருள் பாலிப்பாய்

## அறிவர் தேற்றம்

பந்தங்கள் நீங்கிப் பரமனடி சேர்ந்த பண்புமிகு
அந்தமில் அன்புடை கந்தப்பு நம்பி கருதிக் கரைந்துருகா
எந்தப் பொழுதும் எமக்குமிதா மென்றே எம்பெருமான்
சந்தப் பொற்பாதம்தனை நினைந்தேத்தி சரண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சின்னாலடி, தங்கோடை காரைநகர்
## கணபதிப்பிள்ளை கந்தப்பு சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை வளம்.

“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று”

K.K. என அனைவராலும் நன்கு அறியப்பட்டவரும் அன்பாக அழைக்கப்பட்டவருமாகிய அமரர் கணபதிப்பிள்ளை கந்தப்பு சுப்பிரமணியம் ஆயிரம் பிறைகள் கண்ட அண்ணல் ஆவார். அவர் பூவுலகில் பூரண மனிதனாக வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோனாக விளங்கியவர். காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயம், ஈழத்துச் சிதம்பர ஆலயம் ஆகியவற்றுடன் நெருங்கிய வைராக்கிய பக்தி கொண்டவர். ஈழம் மற்றும் தென்னிந்திய ஆதீனங்களுடன் இவருக்கு இருந்துவந்த தொடர்பு மிக நெருக்கமானது. இவ் ஆதீனங்கள் அமரரின் சேவையைப் பாராட்டி பல விருதுகள் வழங்கிக் கௌரவித்தன. அமரர் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என எல்லோருடனும் இணைந்து இசைபட வாழ்ந்த பெருமகன்.

காரைநகர், தங்கோடை, சின்னாலடியில் புகழ்பூத்த பற்றாசிங்கம் பரம்பரையில் சைவவேளாண் மரபில் 06-10-1929இல் கே.கே. பிறந்தார். சேது சிதம்பரம், திருஅண்ணாமலை என பல புண்ணிய தலங்களை தரிசித்த புகழ்பூத்த சிவபூசைச் செல்வர். காசி அம்பலவி கணபதிப்பிள்ளை கந்தப்பு (முசோலனி) இவரது தந்தையாவார். தயாள சிந்தையும் தார்மீக குணமும் கொண்ட தர்ம பத்தினி வள்ளியம்மை இவரது தாயாவார். பரம்பரை பரம்பரையாக எல்லோரும் இடையறாது அளவற்ற பக்தி கொண்டு வழிபட்டு வந்த பண்டியர் காளி, மணற்காடு முத்துமாரி, ஈழத்துச் சிதம்பர ஆனந்தக் கூத்தன் ஆகிய கடவுள்கள் K.K பரம்பரையினர் மண்ணில் நல்ல வண்ணம் வாழத் துணை செய்கின்றன.

அமரர் கே.கே.சுப்பிரமணியம் பல உடன்பிறப்புக்களைக் கொண்ட உத்தமர் ஆவார். மீனாட்சி, சீதேவிப்பிள்ளை, அம்பலவாணர், இராசநாயகம், சரஸ்வதி, செல்லம்மா, யோகம்மா, மாரிமுத்து, மாணிக்கம், அம்பலவாணர், பரமேஸ்வரி, பூரணம், ஆகியோர் அவரது அன்புச் சகோதரங்கள் ஆகும். அமரர் கே.கே. ஆரம்பக் கல்வியை தங்கோடை அ.மி.பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் மேற்படிப்பை பேராதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே இலங்கை சுங்கத் திணைக்களத்தில் உத்தியோகம் பெற்றார். இலண்டன், மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் புலமைப் பரிசில் பெற்று பயிற்சி பெற்றவர். சுங்க இலாகாவில் உதவி ஆணையாளராக நாற்பது ஆண்டுகள் உயர்பதவி வகித்தார். பின் ஐந்து ஆண்டுகள் முதலீட்டுச் சபையில் பணி புரிந்தார்.

கே.கே.சுப்பிரமணியம் தமது தாய் மாமன் அம்பலவாணர் விசாலாட்சி தம்பதிகளின் செல்வப் புதல்வியும் திருமங்களம், இராசரத்தினம், கோபாலபிள்ளை, இராசையா, சௌபாக்கியம், ஆகியோரின் சகோதரியுமான சரஸ்வதியை (புவனம்) 23-05-1958 நன்னாளில் திருமணம் செய்தார். இல்லறம் நல்லறமாக இனிது நடைபெற்றது. அவர்களின் இன்பக் குழந்தைகளாக வாசுகி, சுரேசன், குருபரன், குகசுதன், ஞானவேல் ஆகியோர் பிறந்தனர். பிள்ளைகளைப் பேணி வளர்த்து உயர் கல்வி புகட்டி உரிய வயதில் திருமணமும் நடாத்தி வைத்தனர்.

| | | |
|---|---|---|
| வாசுகி B.A.(Hons.) | – | இரத்தினகுமாரன் (ரகு) |
| சுரேசன் | – | சாந்திதேவி |
| குருபரன் | – | சசிகலா |
| குகசுதன் | – | புவனேஸ்வரி |
| ஞானவேல் | – | சானுகா |

"தாயில் சிறந்தொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்ற முன்னோர் வாக்குப்படி தாய் தந்தையருக்கு அந்திய காலம் வரை அவர்கள் விரும்பிய பணிகளை விருப்புடனும் வேணவாவுடனும் K.K. செய்து வந்தார்.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்"

பெற்ற தாய் தந்தையரும் மகனின் அன்புப் பணியைக் கண்டு

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

எனப் பெரு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தனர். உடன் பிறப்புக்களையும் தந்தையாக இருந்து கல்வி புகட்டி பொருத்தமான இடத்தில் திருமணம் செய்து கொடுத்து உயர் நிலையில் வாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டினார். வீட்டு வேலைகளை அவரவர் செய்யும் வண்ணம் நேரசூசி தயாரித்து அதன்வண்ணம் திட்டமாகச் செயற்பட வைத்தார். சகோதர சகோதரிகள் நல்ல வண்ணம் வாழ பேராசிரியர் மு.வரதராஜனின் தம்பிக்கு, தங்கைக்கு, கரித்துண்டு போன்ற பல புத்தகங்களை வாசிக்கச் செய்தார். புளியங்குளத்தில் நீச்சல் பயிற்சி கொடுத்தார். வயல் வேலைகளை உடன் பிறப்புக்களுடன் சேர்ந்து லீவு நாட்களில் செய்து வந்தார். ஆளுமையுள்ள குடும்பத்தை உருவாக்க அமரரின் திட்டங்களும் செயற்பாடுகளும் மிகப் பலவாகும். வீட்டிலும், உத்தியோகத்திலும், சமூகத்திலும், நாட்டிலும் சிறந்த நிர்வாகத்தை கே.கே. திறம்பட நடாத்தினார். கந்தப்பு வள்ளியம்மை சின்னாலடி பல திருமணங்களைக் கண்டது. கந்தப்பா வீட்டுத் திருமணங்கள் மட்டுமல்ல மலேசியா வாழ் குஞ்சியப்புமார் பிள்ளைகளுக்கும் அவ்வீட்டிலேயே திருமணங்கள் நடைபெற்றன. இத்திருமணங்களை எல்லாம் தாய் தந்தையருடன் இணைந்து சீரும் சிறப்புமாக கே.கே.சுப்பிரமணியம் நடாத்தி வைத்தார். மலேசியா வாழ் உறவினர்கள் விடுமுறைக்கு வரும்போது கே.கே.யும் லீவு போட்டு வந்து அவர்கள் மகிழும் வண்ணம் விருந்துபசாரங்களும் உல்லாசப் பிரயாணங்களும் ஒழுங்கு செய்வார். குடும்பத்தை குதூகலமாக வைத்திருப்பதே கே.கே.யின் குறிக்கோள். உற்றார், உறவினர், நண்பர்கள் வீடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் தம் வீட்டு நிகழ்ச்சிபோல திறம்படவும் கலகலப்பாகவும் நடாத்தி வைப்பார்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்பது கே.கே.யின் இலட்சியம். சுங்க இலாகாவில் பணியாற்றும்போது எல்லா இனத்தவர்களுடனும் அன்னியோன்னியமாகப் பழகுவார். அவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து விருந்துபசாரங்கள் செய்வார்.

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் மகோற்சவம், ஈழத்துச் சிதம்பர மகோற்சவங்களுக்கு உரியவேளை வருகை தந்து விழாக்களைச் சிறப்பிப்பார். வரும்போது இந்தியாவில் இருந்து விமானமூலம் வண்ணவண்ண மலர்களையும் எடுத்துவர அவர் மறப்பதில்லை. மணற்காடு அம்மன் இரண்டாம் திருவிழா பக்திமயமாக வெகு சிறப்பாக நடைபெறும். நூற்றெட்டு சங்காபிசேகம், வேத விற்பன்னர்களின் வேத ஒலி, ஈழத்தின் அனைத்து தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் இசை வெள்ளம் என்பன விழாவைக் களை கட்டச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்திற்கும், தமிழிற்கும் வீட்டிற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நலம்பல தொண்டுகளை "என்கடன் பணி செய்து கிடப்பதே" எனச் செய்த அமரர் கே.கே.சுப்பிரமணியத்தை பல விருதுகள் தேடி வந்தன. திருவாவடுதுறை ஆதீனம், மதுரை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம், கொழும்பு இராமகிருஸ்ண மடம், நல்லை ஆதீனம், திருகோணமலை சிவயோக சமாஜம் முதலியன இவரிடத்து பெரிய மதிப்பு வைத்துள்ளன. இவை அனைத்தும் கே.கே. அவர்களின் சைவத் தமிழ்ப் பணியினையும் சமூகப் பணியினையும் பாராட்டி விருதுகள் வழங்கிக் கௌரவித்தன. அவர் பெற்ற முக்கியமான கௌரவ விருதுகள் சில:

1. குருபக்த சிரோண்மணி
2. சிவத்திருத் தொண்டர்
   திருக்கைலாச பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் (2006)
3. அருள்நெறித் தொண்டர்
   காஞ்சி மெய்கண்டார் ஆதினம் (1976)
4. சிவதர்ம சுரபி
   அருட்கவி விநாசித்தம்பி (1999)
5. சாமஸ்ரீ கனகஜோதி
   அகில இன நல்லுறவு ஒன்றியம்
6. சிவநெறிச் செல்வர்
7. சைவநெறிக் காவலன்
   கனடா ரொறன்ரோ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் (2003)
8. கலாரசிகமணி
   நல்லை ஆதீனம்,யாழ்ப்பாணம் (1976)
9. பரோபகாரமணி
   காஞ்சிகாமகோடி பீடம் (1997)
10. அடியார்க்கு நல்லவர்
   பேரூர் ஆதீனம், கோயம்புத்தூர் (2008)

இவ்விருதுகள் அமரர் கே.கேயின் ஆன்மீகப் பணிகளுக்கும் அன்பான சமூகத் தொண்டுகளுக்கும் வழங்கப்பட்டவையாகும்.

கே.கே.சுப்பிரமணியம் அவர்கள் சமய மற்றும் தொண்டு நிறுவனங்களில் பதவி வகித்து ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. அவர் வகித்த பதவிகள் சில:

1. அகில இலங்கை இந்து மாமன்றம் – துணைச் செயலாளர்
2. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை — துணைச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாவலர் மாநாடு நடைபெற அரும்பாடுபட்டவர்)

3. காரைநகர் சைவமகாசபை — கொழும்பு பிரதிநிதி
4. காரைநகர் மணிவாசகர் சபை — கொழும்பு பிரதிநிதி
5. காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் திருப்பணிச் சபை உறுப்பினர்.
6. ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான நித்திய பூசை உறுப்பினர்.
7. சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத் தலைவர், செயலாளராக 1989 வரை ஆற்றிய பெரும் தொண்டு.
8. ஈழத்துத் திருநெறிமன்ற ஆரம்பச் செயலாளர், கொழும்பு.
9. காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொறுப்புச் செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியமை.
10. கொழும்பு தமிழ்ச் சங்க அறங்காவலர்.
11. கொழும்பு இராமகிருஸ்ணமிசனில் 40 ஆண்டுகளாக அங்கத்தவர்.
12. 2வது உலக இந்து மகாநாட்டு ஏற்பாட்டாளர்.

அமரர் கே.கே.யின் பணிகள் செம்மையாக நிறைவுற திருமதி சுப்பிரமணியம் உறுதுணையாக இருந்தார். அமரர் கே.கே.சுப்பிரமணியம் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளான ரகுபிரகாஸ், ரகுவர்மன், சாந்தீபன், மிதுசன், கிசன், அபிராமி, கைலாஸ் அனைவருடனும் கூடி மகிழ்ந்து அன்பான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

ஆயிரம் பிறை கண்ட அண்ணல், தொண்டு பல செய்த தூயோன் அமரர் கே.கே.சுப்பிரமணியத்தை 1-12-2010 புதன்கிழமை அபரபக்க தசமியில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆனந்தக் கூத்தனும், மணற்காடு அன்னை முத்துமாரி அம்பாளும் இவரது உச்சிமீது தடம் பதித்து ஆட்கொண்டனர். அவரது ஆத்மா சாந்தியடைய சுந்தரேசப் பெருமான் சௌந்தராம்பிகை பாதங்கள் பணிந்து பிரார்த்தனை செய்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையின் அரவணைப்பில் இருந்த காலத்து நினைவுகளை மீட்டிப் பார்க்கும்

# அன்பு மகன் அம்பலவாணர்.

எங்கள் அம்மா "வானுலகம் திறந்திருக்கிறது" என கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் ஆசி பெற்றவர். அதிகாலை முதல் நித்திரை செல்லும்வரை தேனி போல சுறுசுறுப்பாக இயங்குவார். அப்பாவுடன் இணைந்து பத்தாவிற்கு ஏற்ற பதிவிரைதையாக அல்லும் பகலும் அயராது பணிசெய்தவர். மாட்டுப் பண்ணை, வீடு, காணிகள், பனந்தோட்டம், தென்னந்தோட்டம், எனப் பலதரப்பட்ட வேலைகள் சுழன்று வந்துகொண்டிருக்கும். அம்மா ஏழை முதல் பணக்காரர் வரை யார் வந்தாலும் அன்புடன் உபசரிப்பார். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பதில் இன்பம் அடைவார். தனது அன்புக் குழந்தைகளை வேலைப்பளுவிலும் அரவணைத்து வளர்ப்பதில் கவனம் கொள்வார். இறை பக்தியில் சிறந்தவர். தினமும் நீராடி சிவதீட்சை செய்து கொள்வார். எல்லா விரதங்களையும் ஒழுங்காக அனுட்டிப்பார். கதிர்காமம், சேதி சிதம்பரம் என தென்னிந்திய தலங்கள் அனைத்தையும் அன்பு மகன் கே.கே.யுடன் சென்று தரிசித்தவர்.

அப்பா, அண்ணா, அண்ணியுடன் அம்மாவும் யோகர் சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றார். அப்பொழுது யோகர் சுவாமிகள் அம்மாவை "மகாராசிக்கு வானுலகம் திறந்திருக்கு" என்று ஆசிர்வதித்தார்.

அதிகாலை அம்மா எழுந்து பால் கறந்து மோர் கடைந்து வெண்ணெய் எடுப்பார். பருவங்களுக்கு ஏற்ப வயலுக்குப் போதல், தென்னந் தோட்டம் போதல் என அவவின் வேலைகள் தொடரும். பெரிய வீட்டில் உள்ள கோர்க்காலியில் பெரிய நெற்கூடை நிறைய நெல் இருக்கும். மண்சாடிகளில் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், இலுப்பெண்ணெய் ஊறுகாய், மோர் மிளகாய், வடகம் என வீட்டிற்கு வேண்டியன எல்லாம் வீட்டிலேயே தயார் செய்யப்பட்டது. அடுக்களையில் பறணில் பனாட்டுக் கூடை இருக்கும். பெரிய பானையில் புளி வீட்டிலேயே பினைந்து வைக்கப்படும். வீட்டில் தூதுவளை, மொசுமொசுக்கை, கர்ப்பூரவல்லி, கருவேப்பிலை, ஆமணக்கு, முல்லை என எல்லாச் செடிகளும் நிறைய இருக்கும். சண்டி, முருங்கை, பப்பாசிக்கும் குறைவே இல்லை. வருபவர்களுக்கு இலைகள், காய்கள், எல்லாம் அம்மா இலவசமாகக் கொடுப்பார். கிழக்கு அறையில் எள்ளு, கொடிப்பயறு, குத்துப் பயறு, உழுந்து, குரக்கன், சிறு பயறு என வயலில் விளைந்தவை கோர்க்காலியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். ஓடியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுக்கொடியலும் கூட இருக்கும். வேலைக்கு வருவோர்க்கும் இவற்றை அள்ளிக் கொடுப்பதில் அம்மாவுக்கு நிகர் அம்மாவே. அம்மாவின் தான தர்மங்களால் இன்றும் எல்லாப் பிள்ளைகளும் சீரும் சிறப்புமாக சகல நலன்களும் பெற்று வாழ்கின்றனர். முன்பு பண்டாரிகள் மார்கழித் திருவெம்பாவைக் காலங்களில் அதிகாலை சங்கு ஊதுவார்கள். மற்றைய காலங்களிலும் தானம் பெற வருவார்கள். அம்மா தானம் வழங்குவதுடன் பசியாற சுவையான உணவும் பரிமாறுவார். பருக மோர் கொடுப்பார். இன்றும் அயலில் இருந்த சிறுவர்கள் பெரியவராக மாறியுள்ளனர். என்னைக் காணும்போது வள்ளியாச்சியின் முருங்கைக் குழம்பு, கறிகளின் நறுமணம் இன்றும் கையில் மணக்கிறது என்பார்கள்.

அம்மா வேலைப்பழுவிலும் கோயில்களுக்குச் செல்வதிலும் வழிபடுதலிலும் ஈடுபடுவார். காரைநகர் முத்துமாரி அம்மன் 2ம் திருவிழா எங்களுடையது. அம்மா அதிகாலையிலேயே நீர்ச்சோறு நிறையப்போட்டு மோதகம், புக்கை, பலகாரங்களும் பெற்று அனைவருக்கும் அள்ளி வழங்குவார். எங்கள் குல தெய்வமாகிய காளிக்கு தை, வைகாசியில் பொங்கல் விழாச் செய்வார். யுத்தம் நடைபெற்றபோது மலேசியாவும் யுத்தத்தால் பாதிப்படைந்திருந்தது. பெரியண்ணாவின் (இராசநாயகம்) புதினங்கள் ஒன்றும் அறியாது வீட்டார் கலக்கம் அடைந்திருந்தனர். வைகாசி விசாகப் பொங்கலன்று அம்மா நீராடி காளிகோயிலில் விரதமிருந்தார். அன்று காளி கலையில் தோன்றி "தாயே கவலைப்படாதே. மகன் சுகமாக இருக்கிறான். விரைவில் தபால் வருகிறது. மகனின் சுகம், உற்றார், உறவினர் சுகமும் அவர் தெரியப்படுத்துவார்" என்றது. அப்படியே அண்ணாவின் கடிதமும் விரைவில் வந்தது. காளியில் இன்றும் நம்பிக்கை வைத்தே எங்கள் குடும்பம் இயங்குகிறது.

அம்மா எழுபத்து மூன்று வயதில் நலம் குறைந்து படுக்கையானார். அப்பொழுது அண்ணா கே.கே. சுப்பிரமணியம் இருபத்தெட்டு நாட்களும் அருகில் தனக்கும் கட்டில் போட்டு அம்மாவைப் பக்குவமாகப் பார்த்தார். குளிப்பாட்டி, உடுப்புகள் தோய்த்து, உணவு ஊட்டி பணிசெய்தார். அவருக்கு உதவியாக பதுளையில் இருந்து வந்து சரஸ்வதி அக்காவும் பணி செய்தார்.

அம்மா 1974ஆம் ஆண்டு பிரமதீச வருடம் தை மாதம் திரயோதசி அபரபக்க திதியில் வானுலகம் புகுந்தார்.

**அன்பு மகன் அம்பலவாணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்த அன்பு அண்ணன் இராசநாயகம்! தங்கை பூரணத்தின் உணர்வுப் பகிர்வு

இவர் அப்பா அம்மாவிற்கு மூத்த தவப் புதல்வராக அவதரித்தவர். ஏழு பெண் சகோதரிகளுடன் உடன் பிறந்த இராசநாயகம் வாழ்வாங்கு வாழவைக்கத் தன்னை அர்ப்பணித்தார். இரு தம்பிகளையும் நன்கு படிக்க ஊக்கப்படுத்தினார். தனக்கென வாழாது குடும்பத்துக்காக வாழ்ந்தார். சிறு வயதிலேயே மலேசியா சென்றார். அங்கு சுகாதார அத்தியட்சகராகப் பணிசெய்தார்.

வீட்டிற்கு பணம், தம்பி, தங்கைகளுக்கு வண்ண வண்ண உடுப்புகள், விசுக்கோத்துப் பெட்டிகள், புத்தகங்கள், அப்பா, அம்மா படுக்க ஈச்சார்கள், பிரப்பங் கூடைகள், பாவைப்பிள்ளைகள், வண்ண வண்ணக் கோப்பைகள் என எண்ணற்ற பொருட்களை பாசலாகவும் வருபவர்களிடமும் கொடுத்தும் அனுப்பினார். திருமணப் பருவம் வந்தும் திருமணம் செய்யாது குடும்பத்தை வாழவைக்க முயன்றார். அம்மா, அப்பாவின் உரமான கடித மூலம் ஊர் வந்தார். அவருக்குச் சிறாப்பர் திருச்சிற்றம்பலம் நாகம்மா தம்பதிகளின் மகள் வள்ளியம்மைக்கு 1951இல் திருமணம் நடைபெற்றது. மலேசியாவில் இருந்து வந்த மூன்று மாதங்கள் தான் அண்ணாவுடன் உண்டு உறவாடி மகிழ்ந்து வாழ வாய்ப்புக் கிடைத்தது.

1956ம் வருடம் புரட்டாசி மாதம் மூதாதையரின் புரட்டாதி மாளிகம் கொடுக்க ஆயத்தம் செய்யப்பட்டது. அப்பா சந்தைக்குச் சென்றே மரக்கறி, பழங்கள் வாங்கி வருவார். அதேபோல அன்று அதிகாலை சந்தை செல்ல இருந்தார். அதிகாலை பொல்லாத கனாக் கண்ட அப்பா சந்தை செல்ல விரும்பவில்லை. அம்மாவைக் கடையில் வாங்கச் சொல்லிவிட்டு நெல் விதைக்க வயலிற்குச் சென்றார். அன்று பத்து மணியளவில் குடும்பத்தையே அதிரவைக்கும் தந்தி வந்தது. நான் பாடசாலை சென்றிருந்தேன். பெரியாச்சி யாழ்ற்ரன் கல்லூரிக்கு வந்து என்னைக் கூட்டி வந்தார். அவ வழியெல்லாம் “மலையான மலை சரிந்து விட்டது! குடும்பத் தூண் சாய்ந்து விட்டது! இனி உங்களுக்கு படிப்பு எதற்கு” என்று அழுது குளறிக்கொண்டு வந்தா. வீடு சோபை இழந்தது. எல்லோரும் செய்வதறியாது திகைத்து நின்று திசையெல்லாம் பாரத்துப் புலம்பினர். அண்ணாவின் உடலைக்கூட காணக் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா திருமணமாகி ஆறு வருடங்களிலேயே அன்புத் துணைவியாரையும் இரண்டு குழந்தைகளையும் தவிக்க விட்டுச் சென்றார். சில மாதங்கள் கழிய அண்ணியும் குழந்தைகளும் அண்ணாவை பறிகொடுத்து மலேசியாவில் இருந்து தனியாக வந்தனர். அண்ணாவின் அருமைப் பெண் குழந்தை இராசநாயகியும் சுகமில்லாமல் கொழும்பில் இறந்தார். அவரது மகன் மகிந்தன் விறுக்கர் இராமலிங்கத்தின் மகளை திருமணம் செய்து இரு பெண் குழந்தைகளுடன் கனடாவில் வாழ்கிறார்.

அண்ணா இறந்த நாள் முதல் அப்பா அதிகாலை எழுந்ததும் "அண்ணாமலை அண்ணாமலை" என்று கூறிப் பின் அண்ணாவை நினைத்து அழுவார். "எனக்கு கொள்ளி வைக்காது போய் விட்டாயா? என் காசு காய்க்கும் மரம் போய் விட்டாய" என்பார். மேலும் தனது அப்பா தான் சிறுவனாக இருக்கும்போது இறந்து விட்டாராம். இறக்கும்போது நான் மகனாகப் பிறந்து உதவி செய்வேன் என்று கூறியதாகவும் அவரே இராசநாயகமாகப் பிறந்து குடும்பத்தை உயர்த்தியதாகவும் கூறுவார்.

**அன்புச் சகோதரி பூரணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமழை பொழிந்த தாத்தா, அம்மம்மா!
## பேரன் சிவபாதசுந்தரம்

எனது தாத்தாவும் அம்மம்மாவும் மிகவும் பாசம் நிறைந்தவர்கள். நேசம் மிகுந்தவர்கள். அன்பே மயமானவர்கள். அன்றும் இன்றும் என்றும் என் நெஞ்சில் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் இருந்தே தாத்தா, அம்மம்மாவுடன் நான், அண்ணா, தங்கை ஆகிய மூவரும் வளர்ந்து வந்தோம். கண்ணை இமை காப்பது போல தாத்தா, அம்மம்மா, மாமா, சின்னம்மாக்கள் அனைவரும் அன்புடன் அரவணைத்து வளர்த்தனர்.

தாத்தா வீட்டில் பட்டி நிறைய பாற் பசுக்கள் நின்றன. தொழுவில் வடக்கன் மாடுகள் நின்றன. பெரிய வீட்டில் கூடை நிறைய நெல் கோக்காலியில் இருந்தது. செக்கில் ஊற்றிய நல்லெண்ணெய் மண் சாடியில் இருக்கும். பெரிய சாடியில் ஊறுகாய் இருந்தது. கிழக்கு அறையில் எள்ளு, பயறு, ஒடியல், புழுக்கொடியல் என வீட்டிலேயே எல்லாப் பொருட்களும் இருந்தன. தாத்தா வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் என அடிக்கடி அதிகம் வாங்கி வருவார்.

ஆரம்பக் கல்வியை தங்கோடை அ.மி.த.க.பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ற்ரன் கல்லூரியிலும் கற்றேன். விடுமுறை நாட்களில் புளியங்குளத்தில் சின்ன மாமா நீச்சல் பழக்குவார். சின்னம்மாக்களுடன் வயலுக்குப் போய்வருவேன். அவர்கள் பயறு, குரக்கன் என்பன ஆய்வார்கள். நான் பட்டம் விடுவேன். வயலில் வெள்ளரி, கொம்மடி என்பன நிறைய விளையும். வெய்யில் காலத்தில் அவற்றைச் சாப்பிடுவோம். தாத்தாவின் காரைப்புரியல் பனந்தோட்டத்திலிருந்து நுங்கு, கருப்பனி கொண்டு வந்து தருவார். கல்வி முடிந்த பின் கொழும்பில் வேலை செய்ய கே.கே. மாமா உதவிசெய்தார்.

**க.சிவபாதசுந்தரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாத்தாவின் பெருமைக்குரிய பரம்பரையில் வந்தது பெரும்பேறு!
## பேத்தி புவனா

எனது தாத்தா கந்தப்பு சின்னாலடி காரைநகரைச் சேர்ந்த புகழ்பூத்த பற்றாசிங்கம் பரம்பரையில் சைவ வேளாண் மரபில் பிறந்தவர். சிவபூசைச்செல்வர். சேது தீர்த்தம், சிதம்பர தரிசனம் பன்முறை கண்டவர். இவர் பன்முறை தமிழகத்தில் திருவண்ணாமலை போன்ற புண்ணிய சேத்திரங்களில் மாட்டுப்பேட்டையிலிருந்து மாடுகள் வாங்கி அதிராம் பட்டினம் மூலம் இலங்கைக்கு அனுப்புவார். அவரின் தல யாத்திரையின் தவப் பயனாக பல பிள்ளைச் செல்வங்களைப் பெற்று புகழுடனும் வளமுடனும் வாழ்ந்தார்.

இவரின் மூதாதையர்கள் ஈழத்துச் சிதம்பரத்துக்கும் தாம் பரிபாலனம் செய்த மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கும் தொண்டு செய்து இறுதிவரை சைவாசார சீலர்களாக வாழ்ந்தவர்கள்.

எனது தாய் தந்தைக்கு பத்து ஆண்டுகள் பிள்ளை இல்லாமலிருந்து நான் பிறந்தபடியால் தாத்தா என்மேல் அதிக பற்று பாசத்துடன் உறவாடி வளர்த்தவர். மாம்பழத்தில் எனக்குள்ள பிரியத்தை உணர்ந்து எப்பொழுதும் மாம்பழம் வாங்கித் தருவார்.

இவர் இந்தியா வியாபாரம் செய்தபடியால் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக எனது மகன் ராஜ்சுதன் இந்தியாவில் திரைப்பட இயக்குனராக பணியாற்றுவதுடன் திரைப்படங்களை வாங்கி திரையிட்டும் வருகின்ற துறையில் ஈடுபட்டிருக்கின்றார்.

தாத்தாவின் பரம்பரையில் பிறந்திருப்பதை பெரும்பேறாகக் கருதுவதுடன் எம்மனைவருக்கும் பெருமையுமளிப்பதாகவுமுள்ளது. எம்மீது ஆழமான அன்பும் பாசமும் செலுத்தி மறைந்த எமது தாத்தா அனைத்துப் பேரப்பிள்ளைகளின் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கின்றார்.

**அன்புப் பேத்தி புவனா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாத்தாவின் அன்பான அரவணைப்பில் வளர்ந்தேன் பேரன் குமாரசாமி ஆறுமுகம்

தாத்தாவால் வளர்க்கப்பட்டேன். நான் எனது தாத்தா வீட்டில் சின்னம்மா மருத்துவிச்சியின் உதவியுடன் பிறந்தேன். தாத்தா, அம்மம்மாவின் குடும்பம் மிகப் பெரியது. பெரியம்மா, பெரியப்பா, பிள்ளைகள், சின்னம்மாக்கள், மாமாமார் என பலரும் கூட்டுக் குடும்பமாக இருந்து வளர்ந்தோம். குழந்தைப் பராயத்திலிருந்து வளர்ந்த பின்னும் தாத்தாவுடன் இருப்பேன். தாத்தா சாப்பாட்டு மேசைக்கு வந்ததும் முதலில் எனக்கே ஊட்டுவார். மற்றவர்கள் சாப்பாடு தரக் கூப்பிட்டாலும் போகமாட்டேன். தாத்தாவுடன் இருப்பதிலும் கோப்பி பருகி சாப்பாடு உண்பதிலும் அதிக விருப்பம் இருந்தது. அம்மா பெற்றாலும் என் ஆசை தாத்தாவே ஆறுமுகம் என அன்பாகப் பெயர் சூட்டினார். தங்கோடையிலேயே எனது படிப்பு தொடங்கியது. பின் கே.கே.மாமா பம்பலப்பிட்டி, கொழும்பில் என்னை படிக்கவைத்தார். தாத்தா வீட்டில் பசுக்கள், கன்றுகள், எருதுகள் நிற்கும். கோழிகளும் வளர்ப்பார்கள். பெரியம்மா பிள்ளைகளுடன் கோழிக்குஞ்சுகள் மேய்ப்போம். கன்றுக் குட்டிகளுடன் துள்ளி விளையாடுவோம். ஊஞ்சல் கட்டி ஆடுவோம். எனது தம்பி தங்கைமார் திருகோணமலையில் பிறந்து வளர்ந்தார்கள். எனது தாத்தா, அம்மம்மா, மாமாக்களை எண்ணும்தோறும் பாசம் பெருகுகிறது. தாத்தா, அம்மம்மா பாசமாக நேசமுடன் அன்பு சொரிந்து வளர்ந்ததை மறக்கமுடியுமா? நினைவில் அவை பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளன.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஆறுமுகம் குமாரசாமி (பேரன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தையின் ஈடு இணையற்ற பாசம்
# அன்புப் பேரன் தியாகராசா பரமேஸ்வரன்

தங்கோடை சின்னாலடியில் ஆத்தை வீட்டில் சார்ப்பில் பிறந்தேன். ஆத்தை, சின்னம்மாக்கள் மாமாமார் அன்புடன் அரவணைத்து வளர்த்த னர். இளங்கன்றுப் பாலை ஆத்தை பக்குவமாகப் காய்ச்சிப் பருக்குவார். விரும்பிய பண்டங்களை விருப்பமாகச் செய்து தருவார்.

சின்னாலடியில் எங்கள் வீடு கட்டப்பட்ட பின்னரும் எங்கள் உறவு தொடர்ந்தது. நெல்லு, எள்ளு, பயறு எல்லாம் ஆத்தை வீட்டில் நிறைய இருந்தது. விரும்பிய எல்லாம் ஆத்தை வீட்டிலிருந்து எடுத்து வருவோம். வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் எல்லாம் ஆத்தை பக்குவமாக்கி உண்ணத் தருவார். ஆத்தை என்மீது சொரிந்த பற்று பாசம் அளவிடற்கரியது, என்றென்றும் மறக்கமுடியாதது. பால் கஞ்சி, புளிச்சல் அப்பம், ருசியான முருங்கைக் குழம்பு, பலாக்கொட்டைப் பொரியல் என விதம் விதமாக சமைத்துத் தருவார். ஆத்தையின் வயல் வேலைக்கு நாங்கள் உதவி செய்வோம். வயதான பின் நான் ஆத்தைக்கு நேரத்துக்கு நேரம் உணவு கொடுப்பேன். குளிக்க முழுக நீர் இறைத்துக் கொடுப்பேன். ஆத்தையின் பாசத்திற்கு ஈடு இணையேது?

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**அன்புப் பேரன் தியாகராசா பரமேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களும் ஆராதனைகளும் கோயில் தோன்றிய வரலாறு

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

பண்டைக்கால மக்கள் முதலில் இயற்கைப் பொருட்களை வணங்கி வந்தார்கள். சூரியன், சந்திரன், பஞ்சபூதம், மழை, நதி என்பனவற்றை போற்றினார்கள். இவற்றின்மூலம் அருவநிலையில் இறைவனை வணங்கினர். பின்பு அவற்றிற்குரிய உருவங்களைக் கண்டு அதன்மூலம் வணக்கம் செலுத்தினர். காலகதியில் தமக்கு நிலையான வீடு தேவைப்பட்டதுபோல் தாம் வழிபடும் இறைவனை வெய்யிலில் இருந்தும் மழையிலிருந்தும் காப்பதற்கு மரநிழல் அமைத்து மேடையும் கட்டினர். பந்தலமைத்து மண்ணாலேயும் கோயில் கட்டி வழிபட்டனர். ஆரம்பத்திலே திருவுருவமாக உருண்டைக் கற்களை எடுத்தனர். இதிலிருந்தே லிங்கம் தோன்றியிருக்கலாம். தமிழ்நாட்டில் சில கோயில்களில் உருண்டைக் கற்களே மூலஸ்தானத்தில் இன்றும் காணப்படுகின்றன.

கி.பி.3ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் பல்லவராட்சியில் இன்றைய அமைப்பிலே கோயில்கள் எழுப்பப்பட்டன. பல்லவ மன்னர்கள் கலையபிமானிகளாக விளங்கினார்கள். நிரந்தரமாக நிலைபெறக் கூடிய கோயில்கள் உருவாக்கப்படவேண்டும் என்று அவர்கள் விரும்பினர். மலைப் பாறைகளைக் குடைந்தும் பாறைகளில் உருவங்களைச் செதுக்கியும் கோயில்கள் உருவாக உதவினர். மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னன் இப்பணியில் முக்கிய இடம் பெறுகிறான். பல்லவ மன்னர்களுக்குப் பின் ஆட்சிபுரிந்த சோழப் பெருமன்னர் காலத்தே தான் கோயில் கட்டும் திருப்பணி மிகப் பிரபல்யம் அடைந்தது. கருங்கல்லினாலும் செங்கல்லினாலும் கோயில்களை அமைத்ததோடு விமானம், சுற்றுமண்டபம், கோபுரம், சுற்றுமதில் யாவும் மிக விரிவான நிலையில் அமைக்கப்பட்டன. கருங்கல், செம்பு என்பனவற்றில் திருவுருவங்கள் சமைக்கப்பட்டன. முன்பு மானிட உருவங்களை வணக்கத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. சோழமன்னர் காலத்திலேதான் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் திருவுருவங்கள் சமைத்து வழிபாடு செய்யப்பட்டது. இந்தக் காலத்திலேயே கோயில் கட்டுங் கலை ஈழ நாட்டுக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் பரவியது. விஜயநகர மன்னர்களும் நாயக்க மன்னர்களும் ஆட்சி புரிந்த காலத்தில் மேலும் சிறப்பச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்களுடன் ஆலயத் திருப்பணிகள் விரிவடைந்தன. தெப்பக் குளம், அலங்கார மண்டபம், நந்தவனம், ஆயிரம்கால் மண்டபம், ஆகியவை இக்காலத்திலே திருக்கோயிலோடு இணைந்து விளங்கின. அத்துடன் கலை வளர்ச்சிக்கும் பண்பாட்டு மேன்மைக்கும் சமூக நலனுக்கும் திருக்கோயில்களே மையமாக நின்று நற்பணிகள் ஆற்றத் தலைப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**ஆலய அமைப்பு**

இறைவனுடைய இருவகைப்பட்ட நிலைகள் சொரூபம், தடத்தம் எனப்படும். சோரூபம் என்பது எமது மனம் வாக்குக் காயங்களுக்கு உட்பட்டவனாக இறைவன் நின்று அருள் புரியும் நிலை. இவ்வகையில் மூவகைத் திருமேனிகளைக் கொள்ளுகிறான் பெருமான். அவை அருவம், அருவுருவம், உருவம் என்பன.

"உருமேனி தனித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வானபோது
திருமேனி யுபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவுதானே."

மூவகைத் திருமேனிகளையும் இறைவன் கொண்டது, எமது கருமேனியை கழிக்க வேண்டுமென்ற கருணையினாலேயே. எமது பிறவியை கருமேனி என்று குறிப்பிடுகிறார் அருணந்திசிவம். உருவத் திருமேனியுடன் விளங்குகின்ற ஆலய அமைப்பு உடம்பின் அமைப்பைப் போன்றதாகவே அமைந்துள்ளது. தூலம், சூக்குமம், காரணம் என்பவற்றை விளக்க மூன்று வீதிகளும், பதி, பசு, பாசம் என்பவற்றை விளக்க கொடிமரம், நந்தி. பலிபீடம் என்பனவும், தூலலிங்கமாகக் கோபுரமும், உள்ளமாகக் கர்ப்பக்கிருகமும், ஆறு ஆதாரங்களாகக் கொடிமரந் தொடக்கம் மூலஸ்தானம் வரை அமைந்த பகுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்பார்கள். பிண்டம் என்பது எம்முடல். அண்டம் உலகமாகும். பார்க்குமிடமெங்கனும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய ஆலயம் உலகமே. எனவே மூன்று கோயில்களைக் காணலாம். உலகமாகிய கோயில், கற்கோயில், மனக் கோயில் என்பவை அவையாகும்.

கற்கோயில் அமைப்பை கூர்ந்து கவனிப்போமானால் அதில் பல உறுப்புக்களைக் காணலாம். மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி விமானம் எனப்படும். இதன் மேற்கூரை ஸ்தூபி எனப்படும். தூபியின் கீழுள்ள கருவறை கர்ப்பக்கிருகம் எனப்படும். அதனை அடுத்திருக்கும் மண்டபங்கள் அர்த்த மண்டபம் என்றும் மகா மண்டபம் என்றும் இருவகைப்படும். இதைவிடச் சபா மண்டபம், வசந்த மண்டபம், வெளி மண்டபம் என்பனவும் அமைக்கப்படும். சுற்றுப் பிரகாரத் தெய்வங்களின் அமைப்புங் கொடிமரம், பலிபீடம், நந்திகளின் அமைப்பும் ஆலயங்களில் மிக முக்கியமானவை. இதைவிடத் தூலலிங்கம் எனப்படும் கோபுரமே கோயில் வாயிலாக அமைகிறது. கோயில்களின் பெயர்கள் விமானங்களின் அமைப்பைக் கொண்டு ஏற்பட்டன என்று கூறப்படுகிறது. கோயிற் பெயர்களைத் தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஆலயங்களும்........

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே."

ஆலயங்களின் உட்பொருள் தூல உலகில் வாழும் மனிதனைச் சூக்கும உலகில் அருட்சத்திகளோடு இணைக்கும் நிலையங்களே ஆலயங்களாகும். ஆலயங்களிற் காட்சி தரும் விக்கிரகங்கள்தான் இறைவன் என்று நினைக்கக்கூடாது. அவற்றினூடே விளங்கும் மெய்ப்பொருள் தான் இறைவன் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். மரத்தினால் ஒரு அழகிய யானை உருவாக்கப்பட்டது. அந்த யானை மரத்தை அன்றி வேறோர் இடத்திலிருந்து வந்து புகுந்ததல்ல. மரம்தான் யானையாகக் காணப்படுகிறது. யானையின் அங்கங்களின் அமைப்பை நோக்கினால் மரம் பாவனை அற்று விடுகிறது. என்ன மரத்தால் இது செய்யப்பட்டது என்று நோக்கும்போது யானையின் பாவனை மறைந்து போகிறது. அதுபோல எல்லாம் இறை மயமாய் விளங்கும்போது உலகத் தோற்றம் உண்டாவதில்லை. ஆனால் பிரபஞ்சந் தோன்றும்போது இறைவன் வடிவு விளங்குவதில்லை. இக்கருத்துக்களை விளக்குவதே உருவ வழிபாடாகும். எமது பெற்றோர்கள் மற்றும் பெரியோர்களின் திருவுருவப் படங்களை வைத்து நாம் போற்றும்போது அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் சித்திரமாக நாம் நினைப்பதில்லை. அவற்றிற்கு மாலை சூட்டி வழிபட்டு அழுது தொழுது நிற்கிறோம். அதேபோல, திருக்கோயிற் கருவறைகளில் வெறுங்கல் தான் காட்சி தருகிறது என நினைக்காமல் அதனுள் மறைந்து மிளிரும் இறைவனது உண்மை நிலையைக் காணச் சிரத்தை கொள்ளவேண்டும்.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்."

என்ற திருமந்திரப் பாடல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆலயங்களின் உட்பொருளை விளக்க எழுந்ததாகும். ஆங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த திருவருள் ஊற்றுத் திருக்கோயிலில் அமைந்த திருவுருவங்களின் வழியாலே ஆன்மாக்களுக்குக் கிடைக்கிறது என்பதைச் சிறந்த உவமைகளின் மூலம் சிவஞானசித்தியார் காட்டுகிறது.

"திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னை
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் ஆங்கே
உருக்கோலி மந்திரத்தால் எனநினையு மவர்க்கும்
உளன்எங்கும் இலன்இங்கும் உளன்என் பார்க்கும்
விரும்பாய் வடிவாகி இருந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தால் வந்துதித்து மிகுசுரபிக் கெங்கும்
உருக்காண ஒண்ணாத தால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன்அன் பர்க்கே."

சிவாலயங்கள் யாவும் வேத சிவாகமங்களில் விதித்த முறைப்படி அமைந்தவை. இவற்றின் தத்துவங்களை உணர்ந்து பேணிக்காப்பதால் நாடு நன்மை பெறும். ஒரு அரசனது அரண்மனைக்குச் சென்று ஏதாவது விண்ணப்பிக்க வேண்டுமானால் அங்கு செல்லவேண்டிய முறையை நன்கு அறிந்து செல்லுதல் இன்றியமையாததுபோல் சர்வலோக நாயகனாகிய இறைவனது திருவோலக்கத்தையுந் தரிசிக்க விரும்புவோர் அதற்குரிய முறையை அறிந்துகொள்ள வேண்டும்.

"மன்னனருள் எவ்வண்ணம் மானிடர்பால் மாணவக
அன்ன வகையே அரனருளும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது திருக்களிற்றுப்படியார். ஆனால் இறைவனையும் மனிதரோடு சேர்த்து எண்ணிவிடக் கூடாது. என்றாலும் நீதி தவறாத அரசனை ஆண்டவனோடு சேர்த்துப் பேசுகிறார் திருக்குறள் ஆசிரியர். அறநெறியைத் தவறாது செலுத்தி வந்த மன்னர்களைத் தெய்வமாகவே நினைத்துப் போற்றலாம். திருக்கோயில்களில் இறைவன் இருக்கிறான் என்ற உணர்ச்சி உண்மையாக ஒருவர் உள்ளத்தில் தோன்றுமானால் அவர் பயபக்தியோடுதான் தரிசனத்துக்குச் செல்வார். அதனால் அவர்பெறும் அனுபவத்தை ஏனையோர்க்கு எடுத்துப் போதிப்பதில் தனிப்பெரும் ஆனந்தத்தை அடைவர். இந்த நிலையே நாயன்மார்கள் வாயிலாக நாம் காணுகிறோம்.

**நித்திய நைமித்திகம்**

கோயில் கட்டுவதோடு நின்று விடாது அக்கோயிலில் திருவருள் நிலைபெறுவதற்கு ஆற்றவேண்டிய நித்திய நைமித்திக வழிபாடுகள் பற்றியும் உணர்ந்து செயற்படவேண்டும். நித்திய வழிபாடு, அபிசேகம், அலங்காரம், நைவேத்தியம், கந்தம், தீபம், ஆகிய அங்கங்களோடு மூட்டின்றி நடைபெற்றால் எமது அன்றாட வாழ்க்கை செவ்வனே நடைபெறும். இதேபோன்று நைமித்திக விழாக்கள் ஆலயங்களின் அருட்பொலிவை அதிகரிக்கச் செய்வதற்காக எடுக்கப்படுகின்றன. இவற்றை உற்சவம் என்று சிறப்பாக அழைப்பர். உற்சவம் என்பது கஸ்டத்தை இல்லாமல் செய்வதும் சுகத்தைக் கொடுப்பதும் என்ற கருத்தில் எழுந்ததாகும். இவை சிறந்த அபிசேகம், விசேட பூசை, பதினாறு உபசாரம், தோத்திரம், திருமுறை, ஆசிர்வாதம், திருவுலா என்பவற்றைப் பிரதான அங்கமாகக் கொண்டு நிகழ்வனவாகும். இவற்றை நிகழ்த்திவிப்போரும் நிகழ்த்துவோரும் தரிசிப்போரும் பலவகைச் சிறப்புப் பேறுகளை பெற்று உய்வடைவர். அத்துடன் இதில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் விசேட நிம்மதியும் சந்தோசமும் ஏற்படுகிறது. விசேட பூசைகள் நடக்கும்போது ஆலய தரிசனஞ் செய்வதால் தீராத நோய்கள் தீரத்து வைக்கப்படுகின்றன என்பது முற்றிலும் உண்மை. கோயில் கட்டி இறைவனை பிரதிஸ்டை செய்து கும்பாபிசேகம் நடத்தும்போது கோயிலுக்குத் தகுந்தாற்போல் உற்சவங்களும் ஏற்படுத்தப்படவேண்டும். இதனாலே தூய்மையும் கலை வளர்ச்சியும் ஏற்படுகின்றன. இதனால் நாட்டுக்குச் சகல பேறுகளும் கிடைக்கின்றன என்றும் கூறப்படுகிறது. இயந்திரம் இல்லாத வாகனம் ஓடாது. அதுபோலவே இயந்திரம் இல்லாத உருவங்கள் அருட்பொலிவை கொடுக்கமாட்டா. இயந்திரங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய், நிலக்கரி முதலியன உணவாவதுபோல ஆலய இயந்திரங்களுக்கு அபிசேகம், மந்திரம், பாவனை என்பன சக்தியைக் கொடுக்கின்றன. கோயில்களில் நடைபெறும் நித்திய பூசைகளினால் ஞானநெறியும், நைமித்திக விழாக்களில் கர்மநெறியும் உணர்த்தப்படுகின்றன.

**மகா கும்பாபிசேகம்**

நைமித்திக விழாக்களில் முதன்மையாக எண்ணப்படுவது மகா கும்பாபிசேக விழாவாகும். இதை நடாத்துவதினால் நாட்டிற்கும் மக்களுக்கும் திருக்கோயில்களுக்கும் பெருஞ் சாந்தி ஏற்படுகிறது. இந்த நம்பிக்கையோடு பன்னெடுங்காலமாக கோயில்கள் செப்பனிடப்பட்டு காலத்திற்குக்காலம் மகாகும்பாபிசேகம் நடைபெற்று வந்துள்ளது. திருக்கோயிலின் அருட்பிரவாகங் குறைவுபடாது அதிகரிக்க வேண்டுமானாற் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அட்டபந்தனம் புதுப்பித்து குடமுழுக்கு விழாச் செய்தல் உத்தமமாகும். ஆலயங்களில் அடிக்கடி பால், இளநீர் முதலியவற்றால் அபிசேகம் செய்யப்படும்போது சிறிது சிறிதாக அட்டபந்தனங் கெட்டு விடுகிறது. இதனால் பீடத்துக்கும் விக்கிரகத்துக்கும் இடையே துவாரம் ஏற்பட்டு விக்கிரகத்துக்கு அசைவு ஏற்படுதலுண்டு. இவ்வூறுபாடுகளினால் ஊருக்கும் பூசை செய்பவர்களுக்கும் பல இன்னல்கள் தோன்றக்கூடும். இவற்றை நீக்கிக் கொள்வதற்காக அட்டபந்தனத்தைப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாவை எடுக்கிறார்கள். இவ்வாறு புனர்நிர்மாணம் செய்து கும்பாபிசேகம் நடாத்துவது சிறந்த சிவபுண்ணியச் செயலாகும். முதலில் மூலமூர்த்தியை கருவறையிலிருந்து பெயர்த்தெடுத்து பாலாயத்தில் எழுந்தருளப்பண்ணி சிலகாலம் பூசையை நடாத்தி வருவதுடன் இவ்விடைக்காலத்தில் கருவறை, ஸ்தூபி யாவும் புதுப்பிக்கப்பட்டு திருப்பணிகள் முற்றுவிக்கப்படவேண்டும். மீண்டும் மூலமூர்த்தியை கருவறையில் எழுந்தருளப்பண்ணி அட்டபந்தனம் சாத்தி உரியமுறைப்படி கும்பாபிசேகத்தை நடாத்தவேண்டும். ஆண்டுதோறும் கும்பாபிசேகம் நடைபெற்ற தினத்தில் மணவாளக்கோலத் திருவிழாவை நடாத்தி அருட்பிரவாகத்தைப் பெருக்கிக்கொள்வேண்டும். மகாகும்பாபிசேகத்தை நடாத்தி வைக்கும் சிவாச்சாரியாருந் தெய்வத்தோடு ஒப்பச் சிறந்த இடத்தை வகிக்கின்றார். ஆசாரிய இலட்சணம் அனைத்தும் அமையக்கூடியதாக குடுமி, உருத்திராட்சம், பூணூல், உத்தரியம், வீபூதிப்பை ஆகியவற்றோடு சிவாசாரியார் விளங்கவேண்டும். முப்பத்திரண்டு உருத்திராட்சம் உள்ள மாலையை கழுத்தில் அணியவேண்டும். நூற்றெட்டு மணிகள் சேர்க்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திராட்ச மாலையை ஜெபத்துக்காக வைத்திருக்கவேண்டும். சுத்த வெண்மையானதும் முறைப்படி சம்காரஞ் செய்யப்பட்டதுமான முப்புரி நூலை அணிந்துகொள்ள வேண்டும். பத்துமுழ நீளமான வேட்டியை பஞ்சகச்சமாகக் கட்டி அரையில் மேலாடை கட்டி தோளில் உத்தரியத்துடன் சிரசு மூடித் துணியும் அணிந்துகொள்ள வேண்டும். அத்துடன் வேதவிற்பன்னராயுஞ் சிவாகம சிரோமணியாகவும் அழகும் பொலிவும் வாய்க்கப்பெற்றவராயும் அடக்கமும் ஆசாரமும் நிரம்பப் பெற்றவராயும் காயத்திரி ஜெபந் தினமும் ஜெபிப்பவராயும் அமைய வேண்டும்.

**மகோற்சவம்**

வருடந்தோறும் குறிப்பிட்ட தினங்களில் அமாவாசை, பூரணை என்பவற்றை முன்பின்னாக வைத்து அமைவன மகோற்சவம் ஆகும். ஆறு மாதத்துக்கு ஒரு தடவையும் இவ்வுற்சவம் நடைபெறுவதுண்டு. மகோற்சவ காலத்தில் உற்சவமூர்த்தி காலை, மாலை தவறாமல் வீதிவழியாக உலா வந்து அடியார்கள் இருக்கும் இடத்தில் காட்சி கொடுக்கின்றது. இதனால் ஊருக்கும் சுபீட்சம் ஏற்படுகிறது. நித்திய பூசையினால் ஆலயத்தில் ஆக்கப்படும் அருளானது நைமித்திக விழாக்களினால் ஊரின் நாலுபுறமும் பரப்பப்படுகிறது. இக்காலங்களில் தேவர்களின் ஆசிர்வாதமும் பூலோகத்திற்கு நிரம்பக் கிடைக்கின்றது. மேலிருந்து தொட்டிநீர் குழாய்மூலம் கீழிறங்கி வருவதுபோல தேவ சக்திகள் திருக்கோயில்களை நோக்கி மகோற்சவ காலங்களில் இறங்கி வருகின்றன. கதவு திறக்காத வீட்டில் சூரிய ஒளி புகுந்து கொள்ளாததுபோல மனக்கதவு திறக்கப்படாமல் ஆற்றப்படும் கிரியைகளினால் தேவசக்தி இறங்கி வந்து எந்தப் பயனையும் கொடுக்காது. மகோற்சவத்தின் ஆரம்பம் கொடியேற்றமாகும். சிவாலயங்களில் முன்னே காணப்படவது இடபம். இது தருமத்தின் சின்னமாகும். ஊழிக்காலத்தில் அழிவுக்கு அஞ்சிய அறக்கடவுள் வெள்ளை எருது உருவங்கொண்டு சிவபெருமானை சரணடைய அதனை அவர் ஊர்தியாகவும் கொடியாகவும் ஏற்றுக்கொண்டார். அந்த அறக்கொடியை பெருவிழாவின் தொடக்கத்தில் தேவர்கள், முனிவர்கள் முதலாய பலரும் அறிய உயர்த்திக் கட்டுவதே கொடியேற்றமாகும். பஞ்ச கிருத்தியங்களில் கொடியேற்றம் படைத்தலைக் குறிக்கும்.

தேர்த் திருவிழாவானது தேவர்கள் பொருட்டு இறைவன் தேரேறி திரிபுரதகனஞ் செய்தலைக் குறிக்கும். இதுவே சங்காரத் தொழிலை உணர்த்தும் உற்சவமாகும். தீர்த்தத் திருவிழா சிவானந்தமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரின்பக் கடலில் ஆன்மா திளைப்பதைக் குறிக்கும். திருக்கல்யாண விழா இறைவனின் போக வடிவைக் குறிக்கும். ஆன்மாக்களுக்கு இறைவன் திருவருளாலேயே உலகம் இன்பமுங் கிடைக்கிறது என்பதை காட்ட மணவாளக் கோலத்துடன் காட்சியளிக்கும் விழா இதுவாகும். அவனிடத்துப் பெண்ணுருவாகக் காட்சி கொடுப்பது திருவருளேயன்றி வேறில்லை. மக்கள் நலனுக்கு திருமணமுறை எவ்வளவு இன்றியமையாதது என்பதைக் காட்ட தானே திருமணக் கோலங்காட்டி விளங்குகின்றான் பெருமான்.

**சைவ மக்களின் கவனத்துக்கு**

இதுகாறும் கூறியவற்றால் ஆலயங்களின் இன்றியமையாமையையும் ஆராதனைகளின் அவசியத்தையும் பற்றி அறிந்தோம். மேலும் இவ்விடயத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளையும் நாம் மறக்கக்கூடாது. தூய உடம்புடன் வாழ்பவனுக்கு தூய உள்ளம் இயல்பாக அமைவதுபோல திருக்கோயில்களை புனிதமாகப் பேணினால்தான் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தி தெய்வத்தன்மையை நாட்டுக்கு நல்கும் கோயில் மாத்திரமல்ல, அர்ச்சகர், பணியாட்கள், அறங்காவலர் அனைவரும் தூயவாழ்வு வாழ்பவராக விளங்கவேண்டும். கருத்து, மனம், செய்கை இவை மூன்றும் ஒன்றுபட்டுச் செய்யும் காரியங்கள் தான் நன்மையைத் தரும். இதற்காகவே மந்திரங்கள் ஏற்பட்டன. இவற்றை பொருளறிந்து ஜெபித்து பயபக்தியோடு கிரியைகளை ஆற்றக்கூடிய அந்தணர்களாலேயே கோயில் மூர்த்தி கரம் மேலும் அதிகரிக்கும் என்றால் அது முற்றிலும் பொருத்தமானது. சமயம என்பது பக்தி உணர்வை மட்டும் வளர்ப்பதோடு நின்றுவிடாது மக்களின் பண்பாட்டு வளர்ச்சியிலும் பங்கேற்க வேண்டும். அத்துடன் இதனை அனுட்டிப்போர் திருவருளை முன்வைத்து வாழப் பழகிக்கொள்ளவேண்டும். எமது உடம்பை வெறும் சோற்றுத் துருத்தியாக மாத்திரம் ஆக்கிவிடாது திருவுடம்பாக மாற்ற வேண்டும். காண்பனவும், பேசுவனவும், செயற்படுவனவும் தூய்மையுடையனவாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

சமுதாயத்தில் ஊழல் தோன்றாது காப்பதுதான் சமயம், சமயநெறி இல்லாவிட்டால் சமுதாயம் கட்டுப்பாட்டை இழந்துவிடும். எனவே ஊருக்கு உபதேசம் செய்யும் பொது நீதிமன்றங்களாக திருக்கோயில்கள் விளங்கவேண்டும். கோயிற் பரிபாலனம் செய்யும் அறங்காவலர்கள் அனைவரும் வாள்நுனியில் நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றுவது போன்ற நிதானம் வாய்ந்தவர்களாகவும் தினமும் அக்கோயிலுக்குச் சென்று வழிபடும் நியமமுடையவர்களாகவும் அந்தணர்களையும் ஊழியர்களையும் பெருமனதோடு பேணுபவர்களாகவும் விளங்கவேண்டும். எதனையும் பிடிவாதமாக வற்புறுத்தாமல் மனித சுபாவத்துக்கும் அறிவுக்கும் மதிப்பளிக்கும் பண்பாடு பேணப்படவேண்டும். அவரவர் பக்குவத்திற்கேற்றபடி ஆலயங்களுக்குச் சென்று வழிபட அனைவருக்கும் சர்வ சுதந்திரம் உண்டு. சமுதாயத்தில் அன்பில்லாதவர்கள் எவரும் சமயநெறி நிற்பவர் என்று சொல்வதற்கு தகுதியற்றவராவர். அன்பின் இணைப்பால் சமுதாயத்தை இணைத்துச் செயற்படும் புனித தலங்களே ஆலயங்களாகும். இந்த உண்மைகள் யாவும் சைவ மக்களாகிய எமது உள்ளத்தில் பதியப்பட்ட நடைமுறையில் பயன் தரும் பணிகளாக மலரச் செய்வதற்கு நமது திருக்கோயில்களையும் சிவநெறியையும் பேணி நிற்பதோடு அதன்மூலம் சமூக நலன்களையும் பேணி வாழ்வோமாக.

நன்றி: சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
6.3.1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தப்பு வள்ளியம்மை தம்பதியினரின் பிள்ளைகள்



கந்தப்பு தெய்வானை தம்பதியரின் புதல்விகள்

சீதேவிப்பிள்ளை

மீனாட்சி



இராசநாயகம்



சரஸ்வதி



செல்லம்மா



யோகம்மா



K.K சுப்பிரமணியம்



மாரிமுத்து



மாணிக்கம்



அம்பலவாணர்



பரமேஸ்வரி



புலவர் பூரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தப்பு வள்ளியம்மை தம்பதியினரின் பிள்ளைகள் அவர்களது வாழ்க்கைத் துணைகளுடன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தப்பு + தெய்வானை**

மீனாட்சி + முருகேசு

சிவசுப்பிரமணியம்+ புவனேஸ்வரி
நாகம்மா + தம்பையா
சரஸ்வதி + தம்பையா
கந்தையா
கமலம் + சண்முகம்
ஆறுமுகம்+ விஜயலட்சுமி

சீதேவிப்பிள்ளை

நாகம்மா+ பொ

**கந்தப்பு + வள்ளியம்மை**

இராசநாயகம் + வள்ளியம்மை

இராசநாயகி
மகிந்தன் + யோகேஸ்வரி

சரஸ்வதி + சதாசிவம்

புவனேஸ்வரி + ~~சிவபாதசுந்தரம்~~

செல்லம்மா + கணபதிப்பிள்ளை

நாகரத்தினம் + வேதநாயகி
நாகம்மா + நடாசா
சிவபாதசுந்தரம் + சிவானி
செல்வகுமார் + செல்வரஞ்சி
செல்வராணி + இராசையா
ருக்குமணிதேவி + சிவபாலன்
புவனேஸ்வரி + சிவபாதசுந்த
கங்காதேவி + இரட்ணகுமார்

சுப்பிரமணியம் + சரஸ்வதி

வாசுகி + இரத்தினகுமார்
சுரேசன் + சாந்திதேவி
குருபரன் + சசிகலா
குகசுதன் + புவனேஸ்வரி
ஞானவேல் + சானுகா

மாணிக்கம் + தியாகராசா

மகேஸ்வரன் + விஜயகலா
பரமேஸ்வரன் + சுதர்சினி
விக்கினேஸ்வரன்+ ஜெயசங்கரி
ஞானேஸ்வரன் + நிறைமதி
துவாரகேஸ்வரன் + சிவமலர்
திருமகள் + சுரேந்திரன்

அம்பலவாணர் + தாட்சாயினி

மனோரஞ்சன் + சாந்தினிதேவி
சிறீரஞ்சன் + தனுஜா
இளஞ்செழியன்
பகீரதி + சுதாகரன்
கங்கேஸ்வரன் + கோமுகி

மாரிமுத்து + குமாரசாமி

ஆறுமுகம் + நிற்குணதேவி
கமலவேணி + ஆனந்தராசா
கணேசன் + சிவநாயகி
கருணாகரன் + கமலாசினி
மகேஸ்வரி + இரத்தினசிங்கம்
விக்கினேஸ்வரன் + பாலரஞ்சினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தப்பு + தெய்வானை**

சீதேவிப்பிள்ளை+நடராசா — அம்பலவாணர்

வனேஸ்வரி — நாகம்மா+ பொன்னம்பலம்

சுமி

**கந்தப்பு + வள்ளியம்மை**

செல்லம்மா + கணபதிப்பிள்ளை

ம்

- நாகரத்தினம் + வேதநாயகி
- நாகம்மா + நடாசா
- சிவபாதசுந்தரம் + சிவானி
- செல்வகுமார் + செல்வரஞ்சினி
- செல்வராணி + இராசையா
- ருக்குமணிதேவி + சிவபாலன்
- புவனேஸ்வரி + சிவபாதசுந்தரம்
- கங்காதேவி + இரட்ணகுமார்

யோகம்மா + வைத்திலிங்கம்

- தியாகராசா + சற்குணதேவி
- தனலட்சுமி + கனகசபாபதி
- பரம்சோதி + சிவகௌரி
- பரமநாதன் + புஸ்பாஜினி

அம்பலவாணர் + தாட்சாயினி

- மனோரஞ்சன் + சாந்தினிதேவி
- சிறீரஞ்சன் + தனுஜா
- இளஞ்செழியன்
- பகீரதி + சுதாகரன்
- கங்கேஸ்வரன் + கோமுகி

பரமேஸ்வரி + பரமசிவம்

- கணேசலிங்கம் + கிரிஜாதேவி
- புஸ்பலிங்கம் + சிவரஞ்சினி
- மனோகரி + நாகேந்திரன்
- சண்முகலிங்கம் + மதிவதனா
- தர்மலிங்கம் + சித்திரா
- சிவகௌரி + இராசேந்திரம்
- புஸ்பராணி + விக்கினேஸ்வரன்

பூரணம் + ஏனாதிநாதன்

- ஸ்ரீதரன் + சுகந்தி
- மாலினி + ஞானசம்பந்தன்
- ஸ்ரீகாந்தன் + சிவரஞ்சினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணற்காடு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org